# ஈராக்நாட்டில இராணுவப் புரட்சி

Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

மலர் 10
இதழ் 158
[illegible] சஞ்சிகை. 49
[illegible] 389
National Tamil Daily
தேசிய தினசரி

[illegible] ஆடி 3 சபீர் ஆடி 21 வியாழக்கிழமை (18-7-68)

## ஜனாதிபதி ஆரிப் நாடு கடத்தப்பட்டார்

பாக்தாத், ஜூலை 17

ஈராக்கில், ஜனாதிபதி ஆரிப்பின் அரசாங்கம் கவிழ்க்கப்பட்டுவிட்டதாக பாக்தாத் ரேடியோ அறிவித்துள்ளது.

இராணுவப் புரட்சி ஒன்றின் மூலம், ஜனாதிபதி ஆரிப்பும், பிரதமரும் பதவியிலிருந்து அகற்றப்பட்டுள்ளதாகவும் அது மேலும் குறிப்பிட்டது.

நாட்டின் ஆட்சிப் பொறுப்பு, புதிதாக உருவாக்கப்பட்டுள்ள புரட்சிச்சபையினிடம் விடப்பட்டுள்ளதாக அறிவித்த ரேடியோ, இராணுவப் புரட்சியை நடத்தியவர் யார் என்பது பற்றிய விபரங்கள் அளிக்கவில்லை.

ஜனாதிபதி ஆரிப், நாட்டிலிருந்து வெளியேற்றப்படுவார் என்றும், ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்பட்டுள்ளதாகவும் ரேடியோ கூறியது.

எல்லாத் துறைமுகங்களும் விமான நிலையங்களும் போக்குவரத்துக்கு மூடப்பட்டுள்ளன

ரோட், ரயில் போக்கு வரத்தும், இராணுவ வாகனங்களுக்கு மட்டுமே கட்டுப்படுத்தப்பட்டுள்ளது

# கதவு திறந்ததும் ஓடிவந்த ஹரிஜனர்களைத் தடுத்தனர்

## வெளியே வந்த சுற்றுப்பலி மீண்டும் உள்ளே சென்றது

### கோயிலின் முன் ஏற்படவிருந்த மோதலை பொலிஸார் தடுத்தனர்

யாழ்ப்பாணம், வியாழன்

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் நேற்று நண்பகல் 12 மணிக்கு சுவாமி வெளிவீதி வருவதற்கு முன்னர் சுற்றுப்பலி வெளியில் வந்தபோது சுமார் 10 நிமிடம் குழப்பமான நிலை ஏற்பட்டது. பொலிஸார் விரைந்து சென்று அமைதியை நிலைநாட்டினர். இதைத் தொடர்ந்து கோயிலை சுற்றிய வட்டாரங்களில் பரபரப்பான நிலைமை ஏற்பட்டது.

**முள்கம்பி வேலி**

நேற்றுக்காலை முதல் சுமார் 20 ஹரிஜனர்கள் தேரடியில் கூடியிருந்தனர். நேற்று முன்தினம் ஹரிஜனர்கள் சத்தியாக்கிரகம் இருந்த இடத்தைச் சுற்றி நேற்றிரவு முள்கம்பி வேலி போடப்பட்டுள்ளது வெளி மண்டபத்தில் எவரும் உட்கார முடியாதபடி தண்ணீர் இறைக்கும் யந்திரம்மூலம் சில தொண்டர்கள் தண்ணீர் பாய்ச்சியவண்ணமிருந்தனர்.

பக்தர்கள் வெளிவீதியில் குறைவாகவே காணப்பட்டனர். கோயிலுக்குள் வழக்கமான பூசைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. வழக்கமாக வழிபடச் செல்வோர்கள் குருக்களின் வீட்டினூடாக கோயிலுக்குள் சென்று கொண்டிருந்தனர்.

நண்பகல் 12 மணிக்கு சுவாமி வெளிவீதி வருவதற்கு முன்னர் சுற்றுப்பலி வெளியில்வந்தது. தொண்டர்கள் வெளிமண்டபக் கதவைத் திறந்த சமயம், தேரடியில் அமர்ந்திருந்த ஹரிஜனங்கள் சிலர் வாசலை நோக்கி ஓடி வந்தனர். தொண்டர்கள் வாசலை மறைத்துக் கொண்டிருந்தனர். பொலிஸாரும் அவ்விடத்தை நோக்கி ஓடிவந்தனர். மண்டபத்தில் ஏராளமானோர் திரண்டிருந்தனர். கம்பிவேலிக்கு உள்ளே தொண்டர்கள்; வெளியில் ஹரிஜனர் கோஷ்டியும் பொலிசார் மத்தியிலும் நின்றுகொண்டிருந்தனர். கொந்தளிப்பான நிலைமை ஏற்பட்டது. திரு. சி. சுந்தரலிங்கம் சுமார் 10 நிமிடத்தின் பின்னர் சுற்றுப்பலியை திருப்பிக் கொண்டு செல்லுமாறு தொண்டர்களுக்குத் தெரிவித்தார். வெளிமண்டபத்தில் நின்றவர்களை பொலிசார் கலைத்து, செல்லுமாறு கூறினார்கள் பக்தர்கள் சிதறி ஓடியபோது சிலர் முள் கம்பிவேலியில் விழுந்து காயத்திற்குள்ளானார்கள்.

இதைத் தொடர்ந்து காங்கேசன்துறையைச் சேர்ந்த ஆறுமுகம் கந்தையா என்பவர் கோவிலுக்குள் செல்லும்போது பந்தத்தால் சுடமுயற்சித்துத் தடுத்ததாக விஜேந்தி, மாசிலாமணி ஆகிய இருவர்மீதும் பொலிஸில் புகார் செய்துள்ளார். இப்புகாரைத் தொடர்ந்து சி. சுந்தரலிங்கமும் பொலிஸில் புகார் ஒன்றை செய்துள்ளார்.

கோவிலுக்குள் செல்லத் தடுத்ததாக மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் பிரதம குரு பிரம்மஸ்ரீ துரைச்சாமி குருக்கள், சி. சுந்தரலிங்கம் ஆகியோர் மீது சின்னப்பு கணேசன், வி. குணரத்தினம், நாகரத்தினம் ஆகியோரும் பொலிஸில் புகார்செய்துள்ளனர்.

[6-ம் பக்கம் பார்க்க]

[தமிழ் மொழி 'அ' பாடத்திட்டத்திற்கான மாதிரி வினாவிடைகளை 4-ம், 5-ம் பக்கங்களிற் காண்க]

## தமிழ் பிரதேசங்களில் அபிவிருத்தித் திட்டம் இல்லை

### பரிகாரம் தேட தமிழரசு வாலிபமுன்னணி யோசனை

யாழ்ப்பாணம், வியா.

இலங்கையின் தேசிய நலனைக் கருத்திற்கொண்டு ஐக்கியமாக வாழவேண்டும் என்பதற்காக இரண்டு வெவ்வேறு கொள்கைகளையுடைய இரண்டு அரசியல் கட்சிகளுடன் சேர்ந்திருந்தும் தமிழர்கள் இன்றுவரை ஏமாற்றப்பட்டே வந்திருக்கிறார்கள்.

இவ்வாறு தெரிவிக்கும் தீர்மானம் நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழரசுவாலிப முன்னணியின் கூட்டத்தில் கொண்டுவரப்பட்டது.

வாலிபமுன்னணியின் உபதலைவர் தலைமையில் கட்சிக் காரியாலயத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் இத் தீர்மானம் சம்பந்தமாக மேலும் தெரிவிக்கப்பட்டதாவது.

சிங்களம் மட்டுமே ஆட்சி மொழியென்ற நிலையில் இருந்து அரசினர் மனம் இன்று வரை மாறவில்லை. பிரதேசசபைகள் கூட தர முடியாது என்று கைவிரித்திருக்கிறார்கள். தமிழ்ப்பிரதேசங்களில் அபிவிருத்தித் திட்டமெதுவுமில்லை. இத்தனையுடன் தமிழர்களுக்கு எதுவும் கொடுக்கப்படாதென முன்னாள் பிரதம நீதியரசர் திரு. பசநாயக்க போன்றோர் கூறுகின்றார்கள்.

சிங்கள மகாஜனக் கட்சியை திரு. ஆர் ஜி சேனநாயகா ஆரம்பித்த பின்னர் தமிழர்கள் தன்மானத்துடன் வாழவேண்டுமானால் பிரிந்து தனித் தமிழ்நாடு அமைக்கவேண்டும்.

தமிழ்நாடு எவ்வாறு அமையவேண்டு மென்பதை ஆராயும் பொறுப்பு ஐவர் கொண்ட ஒரு குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது.

மேற்கண்ட தீர்மானங்கள் ஆகஸ்ட்மாதம் 22-ந் திகதி நடைபெறவிருக்கும் கட்சியின் பொதுச்சபையில் கொண்டுவந்து நிறைவேற்றுவதற்கு முயற்சி மேற்கொள்வதென முடிவுசெய்யப்பட்டது. ந. நி.

## 'ஜாதிகசம்பத' சுவீப்பில் ஆறுதல் பரிசு யார்யாருக்கு?

ஹிங்குராக் கொடையில் சென்ற செவ்வாய்க்கிழமை மாலை இழுக்கப்பட்ட முதலாவது 'ஜாதிக சம்பத்' சுவீப் சீட்டிழுப்பின் முதல் 68 பரிசுக்குரிய டிக்கட்டுகளின் இலக்கங்களும் அவற்றுக்குரிய பரிசுத்தொகைகளும் ஈழநாடு பத்திரிகையின் நேற்றைய யாழ்ப்பாணப் பதிப்பில் வெளியிட்டிருந்தோம். அத்துடன் ஹிங்குராக்கொடையில் இழுக்கப்பட்ட ஆறுதல்பரிசுக்குரிய பத்தொன்பது டிக்கட்டுகளின் இலக்கங்களையும் வெளியிட்டிருந்தோம். [illegible]க்காக இன்றும் இதர ஆறுதல் பரிசு பெறும் டிக்கட் இலக்கங்களுடன் பரிசு பெறும் டிக்கட்டுகளின் இலக்கங்களையும்மீண்டும் வெளியிட்டுள்ளோம்.

வாராவாரம் இழுக்கப்படும் தேசிய சுவீப்பில் முதல் பரிசு தொடக்கம் ஆறுதல் பரிசுகள் அனைத்தும் அந்தந்த நேரமே இழுக்கப்பட்டு அறிவிக்கப்படும்.

'ஜாதிக சம்பத்' சுவீப்பின் ஆறுதல்பரிசுகள் முதல் இழுக்கப்பட்ட சீட்டு இலக்கங்களிலிருந்தே கணிக்கப்படுகின்றன.

முதல் நான்கு பரிசுகள் தவிர ஐந்தாவது பரிசு நான்கு டிக்கட்டுகளுக்கும் 6-வது பரிசு பத்து டிக்கட்டுகளுக்கும் 7-வது பரிசு 50 டிக்கட்டுகளுக்குமாக முதல் 68 டிக்கட்டுகள் பரிசுக்குரிய டிக்கட்டுகளாக இழுக்கப்பட்டன,

இவை தவிர ஆயிரம் டிக்கட்டுகள் ஆறுதல் பரிசு பெறும் டிக்கட்டுகளாகும். இந்த ஆயிரம் டிக்கட்டுகளில் 19 டிக்கட்டுகள் ஆறுதல் பரிசுக்குரிய டிக்கட்டுகளென ஹிங்குராக்கொடையிலேயே இழுக்கப்பட்டுவிட்டன. இவை நேற்றைய ஈழநாட்டில் வெளிவந்தன.

19 டிக்கட்டுகளையும் தவிர உள்ள 981 ஆறுதல் பரிசு பெறும் டிக்கட்டுகளும் முதல் பரிசுக்குரிய டிக்கட்

(6ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனீவாவில் ஆரம்பமாகியுள்ள ஆயுத பரிகரண மாநாடு

## ஜோன்ஸன், யூ தாண்ட் அனுப்பிய செய்திகள்

ஜெனீவா, ஜூலை 17

ஜெனீவாவில், ஆயுதப் பரிகரணம் பற்றி ஆராய 17 நாடுகள் கூடியுள்ளன. அணு ஆயுதக் குறைப்பு, ஏவுகணைகளைக் கட்டுப்படுத்துதல் ஆகிய பிரச்னைகள் பற்றி மாநாட்டுப் பிரதிநிதிகள் விவாதிப்பர்.

ஆயுத பரிகரண மாநாட்டுக்கு அமெரிக்க ஜனாதிபதி திரு ஜோன்ஸன் அனுப்பியுள்ள ஒரு செய்தியில், அணுசக்தி ஏவுகணைகளைக் கட்டுப்படுத்துவது பற்றி ரஷ்யாவுக்கும், அமெரிக்காவுக்குமிடையே விரைவில் நடக்கவிருக்கும் பேச்சுவார்த்தைகள் சம்பந்தமான திகதி, இடம் இவை பற்றி இரு நாடுகளும் கூடிய சீக்கிரமே முடிவு செய்யும் என்று கூறியுள்ளார்.

ஐ. நா. பொதுக் காரியதரிசி யூ தாண்ட், ஜெனீவாவில் கூடும் ஆயுத பரிகரண மாநாடு, ஆயுத பரிகரணத்தில் ஒரு புதிய பயனுள்ள அத்தியாயத்தை ஆரம்பித்து வைக்கவேண்டுமெனத் தமது செய்தியில் கோரியுள்ளார்.

சீனாவில்

# மா எதிர்ப்பு இயக்கம் கிராமங்களுக்கும் பரவுகிறது

## நூற்றுக்கணக்கானோர் மரணம்

மாஸ்கோ, ஜூலை 17

சீனத் தலைவர் மா-சே-துங்குக்கு எதிராக நடைபெறும் ஆயுதந்தாங்கிய கிளர்ச்சி நகரங்களிலிருந்து கிராமங்களுக்குப் பரவிவருகிறதென்று தகவல் கிடைத்துள்ளதாக மாஸ்கோ ரேடியோ அறிவித்துள்ளது.

தெற்கு சீனாவில், மா எதிர்ப்பாளர்களுக்கும் ஆதரவாளர்களுக்குமிடையே நடைபெற்ற மோதல்களில் கடந்த 2 மாத காலத்தில், நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டதாகவும் அது தெரிவித்துள்ளது.

மா எதிர்ப்புக் கோஷ்டிகள், வட வியட்னாம், பர்மா, லாவோஸ் எல்லைப்புறங்களிலும் ஆயுதந்தாங்கிய கிளர்ச்சிகளை நடத்திவருவதாகவும் கூறப்பட்டது.

இந்த எதிர்ப்புக் கோஷ்டிகளிடம் இயந்திரத் துப்பாக்கிகளும் மற்றும் ஆயுதங்களும் இருந்தன. சீனத் துருப்புகளிடம் பறிக்கப்பட்டவையே இவை எனக்கருதப்படுகிறது.

# குவாண்டுங் மாகாணத்தில் 2,000 பேர் வெள்ளத்துக்குப் பலி

பீகிங், ஜூலை 17

இது இப்படியிருக்கத் தெற்குச் சீனாவில் குவாண்டுங் மாகாணத்தில் ஏற்பட்ட கடும் வெள்ளத்தில் 2000 மக்கள் உயிரிழந்துள்ளதாகவும், பலத்த பொருட்சேதமும் ஏற்பட்டிருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன.

# தெற்கு ஆபிரிக்காவில் கடும் இரத்தக்களரி

## விரைவில் ஏற்படலாம் என ஸாம்பியா தலைவர் எச்சரிக்கை

லண்டன், ஜூலை 17

பிரிட்டனுக்கு வந்துள்ள ஸாம்பியா அதிபர் டாக்டர் கவுண்டா, வெள்ளையர்கள் விரைவில் ஒதுங்கிடாவிட்டால், தெற்கு ஆபிரிக்காவில் கடுமையான இரத்தக்களரி ஏற்படலாமென எச்சரித்துள்ளார். பத்திரிகையாளர் மகாநாடொன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். தெற்கு ஆபிரிக்காவில் ஏற்படக்கூடிய அந்த இரத்தக்களரி, தற்போதைய நைஜீரிய உள்நாட்டுப் போரைக் குழந்தைப்பிள்ளை விளையாட்டுப் போல் தோன்றச்செய்யும் என்றார் அவர்.

ரொடீஷியாவிலுள்ள சட்டவிரோத ஸ்மித் ஆட்சியை வழிக்குக்கொண்டு வருவதானால் அது பிரிட்டனின் பொலிஸ் நடவடிக்கையினாலேயே முடியுமெனத் தாம் நம்புவதாகவும் டாக்டர் கவுண்டா கூறினார்.

ரொடீஷியாவுக் கெதிராக பிரிட்டன் விதித்துள்ள வர்த்தகத் தடையுத்தரவுகளைச் சில பிரிட்டிஷ் கம்பனிகளே மீறியிருப்பதற்கான சாட்சியம் தம்மிடம் இருப்பதாக அவர் மேலும் கூறினார்.

ஸாம்பியாத் தலைவர் பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்ஸனுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துமுகமாகவே லண்டன் வந்து சேர்ந்துள்ளார்.

---

## 13 மிஸோக்கள் கொல்லப்பட்டனர்

ஷில்லொங், ஜூலை 17

கடந்த இரண்டு வாரங்களில், 13 மிஸோ கலகக்காரர்களை எல்லைப் பாதுகாப்புப் படையினர் கொன்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மற்றும் பல மிஸோக்கள் காயப்படுத்தப் பட்டதாகவும், பலவகை ஆயுதங்கள் அவர்களிடமிருந்து கைப்பற்றப் [illegible] மேலும் [illegible] டது.

இந்தியாவில்

## வெள்ளம் தணிகிறது

### இதுவரை பலர் உயிரிழந்தனர்

புதுடில்லி, ஜூலை 17

இந்தியாவில் கடந்த சில தினங்களாகப் பல ராஜ்யங்களிலும் கடும் மழையினாலும், ஆறுகளின் வெள்ளப் பெருக்கினாலும் ஏற்பட்ட உயிர்ச்சேதம், பொருட்சேதம் ஆகியன பற்றிய விபரங்கள் மேலும் கிடைத்துள்ளன. இப்போது, வெள்ளம் தணிந்து வருவதாகக் கூறப்பட்டுள்ளது.

கேரளாவில், வடக்கு மலபார் பகுதியில் மட்டும் 28 பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கோழிக்கோடில், சுமார் 7,000 மக்கள், பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

மேற்கு வங்காளத்தில் வெள்ளத்தினால் உயிரிழந்தோர் பத்துப் பேராகும். அரசு, வெள்ள நிவாரண நடவடிக்கைகளைத் தீவிரமாக மேற்கொண்டுள்ளது.

அஸ்ஸாமில், கடும் வெள்ளம் காரணமாக ரயில், ரோட்டுப் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு இம்முறை ஏற்பட்ட வெள்ளம், நினைவுள்ளவரை, மிகவும் மோசமானதெனத் தெரிகிறது.

---

## தமிழ்க்காங்கிரஸ் மகாநாடு

யாழ்ப்பாணம், வியா.

தமிழ்க்காங்கிரஸின் வருடாந்த மகாநாட்டின் ஒழுங்குகளைச் செய்வதற்கு, தமிழ் காங்கிரஸ் கமிட்டி இம்மாதம் 23, 24ந் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் கூடுகிறது.

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில், யாழ்ப்பாண மாநகரசபை தேர்தல், தமிழ் அரசாங்க ஊழியர் பிரச்னை பற்றியும் ஆலோசனை செய்யப்படவிருக்கிறது.

வருடாந்த மகாநாட்டை கிளிநொச்சியிலா அல்லது யாழ்ப்பாணத்திலா நடத்துவதென்பது பற்றியும், இக்கூட்டத்தில் இறுதிமுடிவு செய்யப்படும்.

தற்பொழுதுள்ள அரசியல் சூழ்நிலையில், மகாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடாத்தவேண்டுமென்று சிலர் தலைமைப்பீடத்தைக் கேட்டுள்ளதாக தெரியவருகிறது. பிரசாரக்கூட்டங்கள், புதிய கிளைகள் நிறுவுதல் பற்றியும் ஆலோசிக்கப்படுமாம்.

# தமிழக ராஜ்யத்தில் அரசாங்க லொத்தர்

சென்னை, ஜூலை 17

மக்களின் சேமிப்புக்களைப் பயன்படுத்தி, ராஜ்யத்தின் அபிவிருத்தித் திட்டங்களை வளர்ப்பதற்கான தமிழக அரசாங்கத்தின் உத்தேச லொத்தர் பற்றிய விபரங்கள் வெளியிடப் பட்டுள்ளன.

முதலாவது சீட்டிழுப்பு ஒக்டோபர் 14-ம் திகதி நடைபெறுமென்றும், அதன்பின், இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை இந்த லொத்தர் நடத்தப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# டோக்கியோவில் இரண்டு ரயில்கள் மோதின

## 200 பேருக்கு காயம்

டோக்கியோ, ஜூலை 17

ஜப்பான் தலைநகரான டோக்கியோவுக்கருகே நேற்று இரண்டு பிரயாணிகள் ரயில்கள் மோதியதன் விளைவாக, 200 பிரயாணிகள் காயமுற்றனர்.

ஒரு பிரயாணிகள் வண்டியிலிருந்து பிரயாணியொருவர் வெளியே பாய முற்பட்டதைக் கண்ட ரயில் டிரைவர் சடுதியாக 'பிரேக்' போட்டு ரயிலை நிறுத்திய போது, மற்றொரு ரயில் வண்டி பின்னால் வந்து மோதியதாகக் கூறப்பட்டது.

'மக்கள்

# தொட்டில் பிள்ளைகளாக இருந்தால் முன்னேற முடியாது'

## கிளிநொச்சி எம். பி. கூறுகிறார்

யாழ்ப்பாணம், வியா.

'அரசாங்கத்துடன் மக்கள் ஒத்துழைக்கவேண்டும். பொதுமக்கள் தொட்டில் பிள்ளைகளாக இருந்தால் நாடு முன்னேறமுடியாது. நாடு முன்னேற இளைஞர்கள் கல்வித்தரமுள்ளவர்களாகவும், தொண்டு செய்யும் மனப்பான்மை உள்ளவர்களாகவும் இருக்கவேண்டும்'.

இவ்வாறு பூநகரி-வலப்பாடு வீடமைப்புத் திட்டத்திற்கு அத்திவாரக்கல் நாட்டிவைத்துப் பேசும்போது கிளிநொச்சி எம். பி திரு கா. பொ. இரத்தினம் கூறினார்.

பூநகரிக் காரியாதிகாரி திரு. எம். இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் பண்டிதர் கா. பொ. இரத்தினம் தொடர்ந்து பேசுகையில், இராமத்திற்குத் தேவையானவற்றை மக்களே தேடவேண்டும். அரசாங்கத்தின் உதவி எல்லாவற்றிற்கும் கிடைக்குமென நம்பியிருக்கக் கூடாது என்றார்.

பூநகரி மகாதேவார்க்கடல் மூடாமல் தடைப்பட்டிருப்பதை பல தடவை பிரதம மந்திரியிடம் எடுத்துக் கூறியுள்ளதாகவும் கடல் முற்றிலும் மூடாவிட்டாலும் அரைவாசியையாவது மூடும்படி கேட்டுள்ளதாகவும் கூறிய எம்.பி கடல் மூடாமல் தடைப்படுவதற்கு உப்பளம் நிறுவப்படவிருப்பதே காரணம் என்று கூறினார்.

காரியாதிகாரி திரு. எம். இராசரத்தினம், கட்டுறவுப் பரிசோதகர் திரு. வே. வைத்திலிங்கம், திரு. சதுசப்பர், திரு பி. சிற்றம்பலவாணர் ஆகியோரும் பேசினர். [ந. நி.]

---

## 7 பேருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், வியா.

1965-66ம் வருட நெற்காணிவரி கட்டாத 14பேர் மீது தனங்கிளப்பு உடைக்குவயிரிக்செய்கைக்குழுவால் வழக்குத்தொடரப்பட்டு சாவகச்சேரி நீதிமன்றத்திற்கு முதன்முறையாகச் சமுகமளித்த ஏழு பேருக்கு வரிப்பணத்துடன் குற்றமும் விதிக்கப்பட்டது. (ந. நி.)

---

## கண்டியில் விபுலானந்தர் விழா

கண்டி, புதன்

கண்டி மத்திய மாகாண சைவமகாசபையினரின் விபுலானந்த அடிகளார் விழா இம்மாதம் 19ந் தேதி கண்டி புஷ்பதான மகளிர் கல்லூரி மண்டபத்தில் கலாநிதி க. வித்தியானந்தன் தலைமையில் நடைபெறும்.

19ந் தேதி மாலை 5 மணிக்கு கண்டி வட்டார கல்வி அதிகாரி திரு. வெ. சபாநாயகம், அடிகளாரின் திருவுருவப்பட ஊர்வலத்தை சைவ மகாசபை மண்டபத்திலிருந்து ஆரம்பித்துவைப்பார்.

மாலை 6 மணிக்கு முது தமிழ்ப் புலவர்மணி ஏ. பெரியதம்பிப் பிள்ளையும், உப சபாநாயகர் திரு. மு. சிவசிதம்பரமும் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்கள்.

# நைஜீரிய உள்நாட்டுப் போர் பற்றிய ஆபிரிக்கநாடுகள் மாநாடு

## பியாவ்ராவுக்கு அழைப்பு

நியாமி, ஜூலை 17

நைஜீரிய உள்நாட்டுப் [illegible] கூடிப் பேசும் ஆபிரிக்க நாடுகள் [illegible] டி. ஆபிரிக்க ஒற்றுமைச் சங்கம் ஆறு [illegible] ந்த ஆறு நாடுகள். இப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளுமாறு பிரிவினைக் கிழக்கு நைஜீரியாவான 'பியாவ்ரா'வின் தலைவர் கேணல் ஒஜுக்குவுக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

சமஷ்டி நைஜீரியத் தலைவர் கேணல் கவான், மாநாட்டில் கலந்து கொள்ள ஏற்கனவே இங்கு வந்துள்ளார்.

எதியோப்பியா, லைபீரியா, கானா, கொங்கோ. கின்ஷாஷா, நைஜீரியா ஆகிய ஆறு நாடுகளே இம் மாநாட்டில் பங்கு பற்றுகின்றன.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# புதிய நிர்வாகிகள்

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணம், விசே. யாழ். மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின்வருடாந்தப்பொதுக்கூட்டம் யாழ்ப்பாணம் பொலிஸ் மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பின்வருவோர் நடப்புவருட உத்தியோகஸ்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ஈ. கனகலிங்கம், உபதலைவர்கள்: திரு என். தேவபாலசுந்தரம், திரு. என். சோமசுந்தரம், காரியதரிசியும்-தனாதிகாரியும்: திரு. ஈ. சே. குமரையா. நிர்வாகசபையொன்றும் தெரிவுசெய்யப்பட்டது (வி. நி.)

ஃ

**வழக்கம்பரை**

சுழிபுரம், புதன்

வழக்கம்பரை ஸ்ரீ அம்பாள் நாடக மன்ற புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்

தலைவர்: அ. சிவரத்தினம், உபதலைவர்; பொ. சிறுவகிதம்பி, காரியதரிசி: து. ரகு, உபகாரியதரிசி: செ. மகாலிங்கம், தனாதிகாரி: மா. தவராசா, நெறிஅமைப்பு: இ. கிருஷ்ணதுரை, மேடை நிர்வாகம்: ம செல்வராசா, இ. சிவதாஸ், ஒப்பந்தம்: து. தணேசன். நிர்வாகசபை உறுப்பினர்கள்: க. பாலகிருஷ்ணமூர்த்தி, க. திருச்செல்வம்.

ஃ

**பண்ணாகம்**

சுழிபுரம், புதன்

பண்ணாகம் விசவர்த்தனை முருகமூர்த்தி கோவில் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: பண்டிதர் அ. ஆறுமுகம், உப தலைவர்: திரு செ. ஸ்ரீநிவாசன், காரியதரிசியும்-பிரதான நிர்வாகியும்: திரு. செ. திருநாவுக்கரசு, உதவிக் காரியதரிசி: திரு. சி. ஆறுமுகசாமி, தனாதிகாரி திரு. இ. அப்பாத்துரை, உதவிநிர்வாகி: திரு. வே. பரமு.

திருவாளர்கள்: வ. ஆறுமுகம், வே. சரவணமுத்து ஆகிய இருவரும் கணக்குப் பரிசோதகர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

ஃ

**வேலணை**

அல்லைப்பிட்டி, புதன்

வேலணை கலைமகள் சனசமூக நிலையத்தினர், கலைமகள் இளைஞர் விவசாயச் சங்கம் ஒன்றை அங்குரார்ப்பணம் செய்துவைத்தபோது நடப்புவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. வி. எஸ். கனகரத்தினம், உபதலைவர்: திரு. த. இரத்தினசிங்கம், காரியதரிசி: திரு. இ சற்குருநாதன், பொருளாளர்: திரு. ப. சிவரத்தினம். 12 பேர் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

ஃ

**வலி. வடக்கு**

அளவெட்டி, புதன்

அகில இலங்கை அரசினர் பாடசாலை தமிழாசிரியர் சங்க வலி வடக்குக் கிளை நடப்புவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. சி. தாமோதரம்பிள்ளை, உபதலைவர்கள் திரு. க. நவரத்தினம், திருமதி வ. சொர்ணலிங்கம், செயலாளர்: திரு. வே. கந்தையா, உபசெயலாளர்கள்: திருவாளர்கள் மு. க. சுப்பிரமணியம், க. சுப்பிரமணியம், தனாதிகாரி: திரு. ச. நாகநாதன், உபதனாதிகாரி: திரு. ம நாகமுத்து, கணக்குப்பரிசோதகர்: திரு. யோசெப். 5 பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

ஃ

**அனலைதீவு**

அனலைதீவு, புதன்

அனலைதீவு ஐயனார் கோவில் நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: கே. பேரம்பலம், காரியதரிசி: க நாகலிங்கம், உபகாரியதரிசி: கதயாபரராசா, தனாதிகாரி: வே. பொன்னம்பலம், மனேஜர்: மு சுப்பிரமணியம் 11 பேர்கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவுசெய்யப்பட்டது. தீவுப்பகுதி காரியாதிகாரி திரு. விஜயசலிங்கமும் சமூகம் அளித்திருந்தார்.

ஃ

**உடுவில்**

உடுவில், புதன்

உடுவில் கிராமசேவையாளர் பிரிவில் உணவு உற்பத்திச் சங்கக் கூட்டம் திரு எஸ். ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றபோதுபின்வருவோர் புதுவருட உத்தியோகத்தராகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர் திரு. எஸ். ஆறுமுகம், தலைவர் திரு. எஸ். பொன்னையா, உபதலைவர் திரு அ சின்னத்தம்பி, காரியதரிசி திரு எஸ் நாகராசா, உப காரியதரிசி திரு. எஸ் சங்கரப்பிள்ளை, தனாதிகாரி திரு பூ. நவரத்தினம் 15 பேர் கொண்ட ஒரு நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

ஃ

**கல்வயல்**

சாவகச்சேரி, புதன்

கல்வயல், மட்டுவில் முதியோர் கல்வி நிலைய உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர் வித்துவான் மு சபாரத்தினம், தலைவர் திரு. கல்வயல் அருள்வேலழகன், செயலாளர் திரு. கு. பாலசுப்பிரமணியம், தனாதிகாரி திரு. வே. சிவபாதம்.


தேவை

தினசரி 500 முதல் 1000 றுத்தல் வரை

மரவள்ளிக்கிழங்கு

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா

பகுதிகளிலிருந்தும் வாங்கலாம்

ஸ்ரீலங்கா ரப்பியோகா புறடக்ஸ்


தொடர்புகொள்ளுங்கள்:-

சுந்தரம் பிறதர்ஸ்,

73, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.



இறுதிப் போட்டி




1968 ஜூலை 22, 23, 24

கொழும்பு குதிரைப்பந்தயத் திடலில்


# கூட்டுறவாளர் தினம்

பண்டத்தரிப்பு, புதன்

சர்வதேச கூட்டுறவாளர் தினத்தையொட்டி இளவாலைப் பகுதியில் முதன்முறையாகக் கூட்டுறவுத் தினம் கொண்டாடப்பட்டது.

இதனையொட்டி விளையாட்டுப் போட்டிகளும், கலை, கதம்ப நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. பெரியவிளான், சித்திரமேழி, மாரீசன்கூடல் இளவாலை ஆகிய இடங்களிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் இவ்விழாவில் கலந்து கொண்டன.

# தமிழ் மொழி

## 'அ' பாடத்திட்டம்

### மாதிரி வினாக்கள்

பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்க:

[அ] இலங்கையின் மலைப் பிரதேசக் காட்சிகளைப்பற்றி வருணித்து எழுதுக.

[ஆ] 'தேசியக் கல்வித் திட்டம்' என்னும் பொருள் பற்றிக் கட்டுரை எழுதுக.

[இ] நான் கல்வி அமைச்சரானால் என்ற பொருள் பற்றி ஒரு கற்பனைக் கட்டுரை வரைக.

[ஈ] பாடசாலை மாணவர் தத்தம் பகுதிகளிலே உணவு உற்பத்தியை விருத்திசெய்ய என்ன வழிகளைக் கையாளலாம் என்பதுபற்றிப் பத்திரிகைக்கு ஓர் அறிக்கை எழுதுக.

[உ] ''வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்'' என்பதை விளக்கும் கதையொன்றெழுதுக.

2. பின்வரும் உரைப் பகுதியை மூன்றிலொரு பகுதியாகச் சுருக்கி எழுதுக:

பண்டைய மனிதன் பழங்களையும் கிழங்குகளையும் தின்று வந்தான். அவை கிடைக்கத் தவறிய காலங்களில் அவன் விலங்குகளைக் கொன்று உண்ணத் தொடங்கினான் விலங்குகளின் இறைச்சி முதலிற் பச்சையாகவே உண்ணப்பட்டது. தொடக்கத்தில் அவன் தவளைபோன்ற சிறிய பிராணிகளையே உண்டிருத்தல் வேண்டும் கொன்ற விலங்குகளின் இறைச்சியைக் கிழிக்க கற்கருவி கண்ட பின்னரே, பண்டைய மனிதன் முயல், மான், ஆடு, மாடு போன்ற விலங்குகளின் இறைச்சியை உண்ணத் தொடங்கியிருத்தல் வேண்டும். அவன் பழங்களையும் விதைகளையுமே தனக்கு முக்கிய உணவுப் பொருளாகக் கொண்டு, இறைச்சியைத் துணை உணவுப் பொருளாகக் கொண்டான். மனிதனுடைய பல் அமைப்பு இன்றைவும் இந்த உண்மையைத்தான் எடுத்துக் காட்டுகிறது.

கற்கோடரிகளும், ஈட்டிகளும், வட்டக்கற்களும் விலங்குகளை வேட்டையாடவும் கொடிய விலங்குகளைக் கொல்லவும் பயன்பட்டிருத்தல் வேண்டும். பண்டைய மனிதன் தொடக்கத்தில் கொடிய விலங்குகளுடனும் விஷப் பூச்சிகளுடனும் வாழவேண்டிய அவசியநிலை இருந்தது. அவன் அவற்றின் தாக்குதலிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ள மேற் சொல்லப்பட்ட கற்கருவிகளையே பயன்படுத்தினான். ஆபத்துக் காலங்களில் மரக்கிளைகளின் மீது தங்கினான். இங்ஙனம் அமைந்த ஆபத்தான சூழ்நிலை அவனுக்குப் படிப்படியாக அஞ்சாமையை வளர்த்தது. அவன் தன் அறிவைப் பயன்படுத்தி மேற் கூறிய கருவிகளைக் கண்டுபிடித்தான். படிப்படியாக வில்லையும் அம்பையும் பயன்படுத்தி விலங்குகளையும் பறவைகளையும் வேட்டையாடத் தொடங்கினான். அவன் மரபினரே தென்னிந்தியக் காடுகளில் இன்று வாழ்ந்துவரும் வேடர்களாவர்.

மூங்கில்கள் பெருங்காற்றில் ஒன்றோடொன்று உராய்ந்து தீப்பிடித்து எரிதல் ஓர் இயற்கை நிகழ்ச்சியாகும். இதனைக் கண்ட பண்டைய மனிதன் இரண்டு மரத்துண்டுகளைக் கொண்டு நெருப்பை உண்டாக்கலாம் என்பதை அறிந்தான். பின்பு ஒரு மரக்கட்டையில் கூரிய கற்கருவிகளைக் கொண்டு சிறிய பள்ளத்தை உண்டாக்கி அப்பள்ளத்தில் ஒரு குச்சியை விட்டுக் கடைந்து தீயை உண்டாக்க அறிந்தான், சக்கிமுக்கிக் கற்களைக் கொண்டு நெருப்பு உண்டாக்கும் முறை மூன்றாவதாம். பழைய மனிதன் இம்மூன்று முறைகளையும் கையாண்டான்.

3. பின்வருஞ் செய்யுள்களை வாசித்தபின்னர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை தருக:

[அ] இதந்தரு மனையினீங்கி இடர்மிகு சிறைப்பட்டாலும்
பதந்திரு விரண்டு மாறிப் பழிமிகுத் திழிவுற்றாலும்
விதந்தரு கோடியின்னல் விளைந்தெனை யழித்திட்டாலும்
சுதந்திரதேவி நின்னைத் தொழுதிடல் மறக்கிலேனே.

[ஆ] நின்னருள் பெற்றிலார் நிகரிலாச் செல்வரேனும்
பன்னருங் கல்விகேள்வி படைத்துயர்ந்திட்டாரேனும்
பின்னரும் எண்ணிலாத பெருமையிற் சிறந்தாரேனும்
அன்னவர் வாழ்க்கை பாழாம் அணிகள் வேய்பிணத்தோடொப்பார்

[இ] தேவி நின்னொளி பெறாத தேயமோர் தேயமாமோ
ஆவியங் குண்டோ செம்மை அறிவுண்டோ ஆக்கமுண்டோ
காவிய நூல்கள் ஞானக் கலைகள் வேதங்களுண்டோ
பாவியரன்றோ நின்றன் பாலனம் படைத்திலாதார்.

[i] இச் செய்யுள்களின் பொருளை எழுதுக.

[ii] இரண்டாஞ் செய்யுளிற் கூறப்பட்ட உவமான உவமேயத்தினை விளக்குக?

[iii] இதம், இன்னல், அணிகள், ஆவி இச்சொற்களுக்கு ஒத்த கருத்துள்ள ஒவ்வோர் சொல் எழுதுக.

[iv] தொழிற்பெயர், எதிர்மறை வினைமுற்று, வினைத்தொகை, வினையாலணையும் பெயர், பெயரெச்சம் இவற்றுக்குச் செய்யுள்களிலிருந்து ஒவ்வோர் உதாரணந் தருக

4. பின்வருவனவற்றில் பொருள் விளங்க அவற்றை வாக்கியங்களிலமைத்தெழுதுக:

கைம்மாறு, தடாகம், பராக்கிரமம், குதூகலம், தாரணை, கீர்த்தி, வஞ்சனை, ஐயப்பாடு, குறும்பு, நாணம்.

5. பின்வருவனவற்றின் குறிப்புப் பொருள் நன்கு விளங்குமாறு அவற்றைத் தனித்தனி வாக்கியங்களிலமைத்துக் காட்டுக:

மூக்கிலேறுதல், புறங்காட்டல், கடைத்தேறுதல், கையாளுதல், புறங்கூறுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8-வது தடவையாக வேம்படி மகளிர்கல்லூரி சாம்பியனாகியது

## 'நடேஸ்வரா' இந்திராவின் 3 புதிய சாதனைகள்

— நமது விளையாட்டு நிருபர் —

யாழ்ப்பாணம், விசா. யாழ்ப்பாணம் மகளிர் பாடசாலை விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் யாழ். மாவட்ட பெண்கள் பாடசாலைகளுக்கிடையில் சென்ற செவ்வாய்க்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற விளையாட்டுப்போட்டியில் வேம்படி மகளிர் உயர்பாடசாலை 216 1/2 அதிகப்படியான புள்ளிகளைப்பெற்று இம்முறையும் சாம்பியனாகியது. இவ்விளையாட்டுப் போட்டியில் கடந்த 7 வருடங்களிலும் வேம்படி மகளிர் உயர் பாடசாலையே முதலாவது இடத்தைப்பெற்றது குறிப்பிடத்தக்கது. சண்டிக்குழி மகளிர் கல்லூரி 116 புள்ளிகளைப் பெற்று இரண்டாவது இடத்தையும், மெதடிஸ்த மகளிர் உயர் பாடசாலை 85 புள்ளிகளைப் பெற்று மூன்றாவது இடத்தையும், கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் 82 புள்ளிகளைப் பெற்று நான்காவது இடத்தையும் பெற்றது.

மேற்பிரிவில் நடேஸ்வராக்கல்லூரியைச் சேர்ந்த செல்வி எம். சந்திரா இப்போட்டியில் மூன்று புதிய சாதனைகளை நிலைநாட்டினார் இவர் 30 புள்ளிகளைப்பெற்று மேற்பிரிவில் சாம்பியனாகவும், சண்டிக்குழி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த செல்வி எஸ். நடராசா 22 புள்ளிகளைப் பெற்று மத்தியபிரிவில் சாம்பியனாகவும், இதே கல்லூரியைச்சேர்ந்த செல்வி எஸ். சாமுவேல் 21 புள்ளிகளைப் பெற்று கீழ்ப்பிரிவு சாம்பியனாகவும், இதே கல்லூரியைச்சேர்ந்த செல்வி எஸ். சாமுவேல் 21 புள்ளிகளைப் பெற்று கீழ்ப்பிரிவு சாம்பியனாகவும் வந்தனர்.

மத்தியபிரிவில் வேம்படி மகளிர் உயர் பாடசாலையைச் சேர்ந்த செல்வி எம் ரஞ்சனிசிங்கம். நீளம் பாய்தல் போட்டியில் 15வருடங்களாக இருந்த சாதனையை முறியடித்தது ஓர் புதிய சாதனையை நிலைநாட்டினார்.

(நாளை தொடரும்)


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

காணி:
பாடசாலைக்கு அருகாமையில் போக்குவரத்து வசதியுள்ள இடத்தில் 8 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிடலாம். ஐயாத்துரை சரஸ்வதி, இல. 9/7, ராஜேஸ்வரி வீதி, நாயன்மார் கட்டு, யாழ்ப்பாணம். 1246

கடைச்சல் மிஷின்
தனிப்பாவிப்பிலுள்ள 6 அடி நீள R. K. "லேபி லைட்" அமெரிக்க கடைச்சல் மிஷின் நல்ல நிலையில் சகல உபகரணங்களுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு பத்மா தொழிற்சாலை, 88, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 1238

### தேவை

தெசவாளர்கள்:
தேர்ச்சி பெற்ற பெண் தெசவாளர்கள் ஈழநாடு அலுவலகத்துக்குச் சமீபத்திலுள்ள நெசவாலைக்குத் தேவை. விண்ணப்பிக்க: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். 1245

மானிப்பாய் வெஸ்லி
தினசரி 6-30, 9-30.
பிரீ பேயா, பேயா 2-30
எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா நடித்த
முகராசி

ராணி
(யாழ்ப்பாணம்)
ஜெமினி — சரோஜாதேவி
நாகேஷ் — விஜயநிர்மலா நடித்த
பணமா பாசமா


வின்ஸர்
சிவாஜி கணேசன்
சௌகார் ஜானகி நடித்த
படிக்காத மேதை

REGAL JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 P. M.
Tony Young
Dan Duryea
in
TAGGART

MANOHARA
JAFFNA
Daily at
4-45, 7-00, 9-45 p.m.
Mickey Rooney
in
24 Hours to kill

5-வது வெற்றி வாரம்!
கிங்ஸ்லி
[கொழும்பு]
2.00 மாலை 6.00, 9.30.
இந்திய ஜனாதிபதி பரிசு பெற்ற சிறந்தபடம்.
காதல் மன்னன்
★ ஜெமினி கணேசன்
★ கே. ஆர். விஜயா
★ நாகேஷ்
நடித்த
ஏ. வி. எம்.
புரொடக்ஷன்ஸ் ராமு

இப்பொழுது திரையிடப்படுகிறது!
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, 10-00.
ஜேம்ஸ்பொண்ட்
★ ஜெய்சங்கர்
★ எல். விஜயலக்ஷ்மி
★ மனோகர்
நடித்த
வல்லவன் ஒருவன்

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30

ரகுநாதன்-சந்திரகலா நடித்த
நிர்மலா
எஸ். ரி. ஆர். பிலிம்ஸ் வெளியீடு


# தமிழ்மொழி

### விடைகள்

3. செய்யுட்களின் பொருள்;

(i) இன்பந்தருகின்ற வீட்டினின்று நீங்கி துன்பத்தையுடைய சிறையிலே அடைப்பட்டாலும், பதவி செல்வம் இரண்டும் இழந்து பழிஉண்டாகி இழிவடைந்தாலும், பலகோடி துன்பம் உண்டாகி என்னை அழித்தாலும், சுதந்திரதேவியே, உன்னைத் தொழுவதை மறக்கமாட்டேன்.

உனது அருளாகிய சுதந்திரத்தைப் பெறுதவர் ஒப்பற்ற செல்வராயினும் சொல்லுதற்கரிய கல்விகேள்வியிற் சிறந்து உயர்ந்தவராயினும் பின்னரும் அளவற்ற பெருமையிற் சிறந்தவராயினும் அத்தகையோர் வாழ்க்கை பாழாம். அவர்கள் ஆபரணங்களணிந்த பிணத்திற்குச் சமானமாவார்.

தேவியே, உன்னுடைய ஒளிபெறாத தேசம் ஒரு தேசமாமோ. உயிர் அங்கு உண்டோ, சிறந்த அறிவுண்டோ, செல்வமுண்டோ, காவியநூல்கள். ஞானநூல்கள், வேதங்கள் என்பன அங்குண்டோ? உனது பாதுகாப்பினைப் பெறுதவர்கள் பாவிகளல்லவா!

(ii) இரண்டாஞ் செய்யுளிற் கூறப்பட்ட உவமான உவமேயம்.

(ii) உவமானம்:- அணிகளை வேய் பிணம்.
உவமேயம்:- அளவற்ற செல்வத்தைப் பெற்றவராயினும் கல்வி கேள்விகளிற் சிறந்து உயர்ந்தவராயினும் பெருமையிற் சிறந்தவராயினும் சுதந்திரம் பெறாதவர்.

| உவமானம் | உவமேயம் |
|---|---|
| அணிகள் | செல்வம், கல்வி. கேள்வி, பெருமை. |
| பிணம் | சுதந்திரதேவியின் அருள் பெற்றிலாதார். |

பிணத்திற்கு அணிகள் அணிவதனாற் பயனில்லை. அது போல சுதந்திரதேவியின் அருள் பெறாதார்க்கு மற்றைச் சிறப்புகளாற் பயனில்லை.

(iii) ஒத்த கருத்துள்ள சொற்கள்:-
இதம் — இன்பம்.
இன்னல் — துன்பம்.
அணிகள் — ஆபரணங்கள்.
ஆவி — உயிர்.

(iv) தொழிற் பெயர்: — தொழுதிடல்.
எதிர் மறை வினைமுற்று: — மறக்கிலேன்.
வினைத்தொகை:— வேபிணம் [வேய்ந்த பிணம்]
வினையாலணையும் பெயர்: — பெற்றிலாதார்.
பெயரெச்சம்: — எண்ணிலாத [பெருமை]

4. கைம்மாறு: கற்றறிந்தோர் கைம்மாறு கருதாமல் தம்மாலியன்ற உதவியைச் செய்வர்.

தடாகம்:- நளனும் தமயந்தியும் பூஞ்சோலைகளும், தாமரைத் தடாகங்களும் உள்ள இடங்களில் இன்பமாகப் பொழுதைக் கழித்தனர்.

பராக்கிரமம்:- இராம இலக்குமணரின் பராக்கிரமத்தை அறியாது இராவணன் அவர்களுடன் போரிடச் சென்றான்.

குதூகலம்:- போரிலே பாண்டவர் வெற்றி பெற்றதும் நாட்டு மக்களனைவரும் குதூகலமடைந்தனர்.

தாரகை:- தாரகைகள் நடுவே தண்மதி போன்று பாண்டவர் நடுவே கிருஷ்ணபகவான் விளங்கினார்

கீர்த்தி:- வாய்மையினின்றும் தவறாத அரிச்சந்திரனின் கீர்த்தி உலகுள்ளளவும் நிலைபெற்று நிற்கும்

வஞ்சனை:- சகுனியின் வஞ்சனை எண்ணங்களுக்குத் துரியோதனன் இணங்கினான்.

ஐயப்பாடு:- மாணுக்கன் தனக்கேற்பட்ட ஐயப்பாடுகளை ஆசிரியரிடம் கேட்டறிந்தான்.

குறும்பு:- தனது மக்களின் குறும்புத் தனங்களைக் கண்டு தந்தை கோபங்கொண்டான்.

தானம்:- ஒருவர் செய்த தான தருமமே அவருக்கு மறுமையிற் பயனளிக்கும்.

5. முகங்கோணுதல்:- தான் விரும்பிய பொருளைத் தனக்குக் கொடுக்கவில்லை என்பதற்காக அவன் முகங்கோணி நின்றான்.

புறங்காட்டல்:- இறப்பு வரினும் போரிலே புறங்காட்டல் வீரர்க்கழகன்று.

கடைத்தேறுதல்:- அடியவனொருவன் பிறப்பினின்றும் கடைத்தேறுதல் வேண்டி இறைவனை அல்லும் பகலும் வழிபட்டான்.

கையாளுதல்:- பகைவரை வெல்லுதற் பொருட்டுத் தீய வழிகளைக் கையாளுதல் செங்கோலரசர்க்கு இயல்பன்று

புறங்கூறுதல்:- ஒருவரில்லாதவிடத்து அவரைப் பற்றிப் புறங்கூறுதல் இழிந்தோர் இயல்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஜாதிகசம்பத' குலுக்கலில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி] டின் இலக்கத்திலிருந்து 7 வது பரிசுக்குரிய ஐம்பது டிக்கட்டுகளில் இழுக்கப்பட்ட வரிசைக்கிரமத்தின்படியே 25-வது டிக்கட்டின் இலக்கத்துடன் சேர்த்து கணிக்கப்படுகின்றன.

அதாவது 14 E 001147 இலக்கத்தைக் கொண்ட டிக்கட் முதல்பரிசு பெறும் டிக்கட்டாகும் அதே இலக்கங்களைக் கொண்ட, ஆனால் எழுத்துக்கள் வேறாகவுள்ள டிக்கட்டுகள் ஆறுதல் பரிசு பெறும் டிக்கட்டுகளாகும். உதாரணமாக 14 E 001147 டிக்கட் வைத்திருப்பவர் முதல்பரிசு பெறும்போது 14 A 001147 இலக்கமுள்ள டிக்கட் வைத்திருப்பவர் ஆறுதல் பரிசுபெறுவார்.

I என்ற எழுத்து நீங்கலாக முதல் பரிசுக்குரிய டிக்கட்டின் இலக்கங்கள் தொடக்கம் சீட்டு இழுக்கப்பட்ட கிரமத்தின்படி 41 வது டிக்கட்டாக இருக்கும். 34 F 001180 என்ற இலக்கம் வரையுள்ள டிக்கட்டுகளில் A எழுத்துமுதல் Z எழுத்துவரை உள்ள டிக்கட்டுகள் ஆறுதல்பரிசுபெறும் டிக்கட்டுகளாகும். 34 F 001180 என்ற டிக்கட் 4045 ரூபா பரிசு பெறும் ஒரு டிக்கட், இந்த F எழுத்துள்ள டிக்கட் அந்தப் பரிசைப் பெற்றுக்கொள்ள I என்ற எழுத்து இல்லாத A முதல் Z வரையுள்ள டிக்கட்டுகள் ஆறுதல் பரிசு பெறும் டிக்கட்டுகளாகும்.

இந்தக் கணிப்பை புரிந்துகொள்ளும் முறையில் ஆறுதல் பரிசுக்குரிய டிக்கட்டுகளின் இலக்கங்களில் ஒரு சில டிக்கட்டுகளின் இலக்கங்கள் விபரமாக கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

I என்ற எழுத்தையும் முதலில் பரிசுக்குரியனவாக இழுக்கப்பட்ட எழுத்தையும் நீக்கி முதலிலிருந்து 41 வது டிக்கட்வரையுள்ள இலக்கங்களில் ஒவ்வொன்றாக 24 டிக்கட்டுகள் ஆறுதல் பரிசுக்குரியவை அதாவது 14 E 001147 என்ற டிக்கட் முதல் பரிசைப் பெற அந்த எழுத்தையும் I எழுத்தையும் தவிர்ந்த A முதல் Z வரையுள்ள 24 எழுத்துக்களுள்ள டிக்கட்டுகள் ஆறுதல் பரிசுபெறும்

இதன்படி 984 டிக்கட்டுகளும் சீட்டிழுப்பிலேயே இழுக்கப்பட்ட 19 டிக்கட்டுகளுமாக மொத்தம் 1003 டிக்கட்டுகளுக்கு ஆறுதல் பரிசு கிடைக்கவேண்டும் ஆனால் 05 S 10140 19 Q 000735, 27 C000982 ஆகிய டிக்கட்டுகள் விற்பனையாகாததன் காரணமாக இந்த மூன்று டிக்கட்டுகளுக்கும் பரிசு இல்லை

ரூபா 8090 பரிசு பெறும் பத்து டிக்கட்டுகளில் 05 S 000172 எனக் கொடுக்கப்பட்ட முடிவு தேசிய லொத்தர் சபை நேற்று விடுத்த அறிக்கையில் 05 A 000172 எனக் கொடுக்கப்பட்டுள்ளது.

## இதோ சில விபரங்கள்

தலா 809 ரூபாய் ஆறுதல் பரிசு பெறும் டிக்கட்டுகள் விபரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| 14 A 001147 | 14 B 001147 | 14 C 001147 |
| 14 D 001147 | 14 F 001147 | 14 G 001147 |
| 14 H 001147 | 14 J 001147 | 14 K 001147 |
| 14 L 001147 | 14 M 001147 | 14 N 001147 |
| 14 O 001147 | 14 P 001147 | 14 Q 001147 |
| 14 R 001147 | 14 S 001147 | 14 T 001147 |
| 14 U 001147 | 14 V 001147 | 14 W 001147 |
| 14 X 001147 | 14 Y 001147 | 14 Z 001147 |
| 25 A 000065 | 25 B 000065 | 25 C 000065 |
| 25 D 000065 | 25 E 000065 | 25 F 000065 |
| 25 G 000065 | 25 H 000065 | 25 J 000065 |
| 25 K 000065 | 25 L 000065 | 25 M 000065 |
| 25 N 000065 | 25 O 000065 | 25 P 000065 |
| 25 Q 000065 | 25 R 000065 | 25 S 000065 |
| 25 T 000065 | 25 U 000065 | 25 V 000065 |
| 25 W 000065 | 25 X 000065 | 25 Y 000065 |
| 19 A 000343 | 19 B 000343 | 19 D 000343 |
| 19 E 000343 | 19 F 000343 | 19 G 000343 |
| 19 H 000343 | 19 J 000343 | 19 K 000343 |
| 19 L 006343 | 19 M 000343 | 19 N 000343 |
| 19 O 009343 | 19 P 000343 | 19 Q 000343 |
| 19 R 000343 | 19 S 000343 | 19 T 000343 |
| 19 U 000343 | 19 V 000343 | 19 W 000343 |
| 19 X 000343 | 19 Y 000343 | 19 Z 000343 |

இதேபோல் I என்ற எழுத்தையும் G என்ற எழுத்தையும் தவிர 29 A 001191 தொடக்கம் 29 Z 001191 வரையுள்ள டிக்கட்டுகளும் I என்ற எழுத்தையும் R என்ற எழுத்தையும் தவிர. 08 A 000282 என்பதிலிருந்து- 08 Z 000282 வரையுள்ள டிக்கட்டுகளும் I என்ற எழுத்தையும் S எழுத்தையும் தவிர 05 A 000127 முதல 05 Z 000127 வரைஉள்ள டிக்கட்டுகளும் ஆறுதல் பரிசுபெறும் டிக்கட்டுகளாகும்.

இதேபோல் பின்வரும் இலக்கங்களையுடைய டிக்கட்டுகள் அவற்றின் அருகே அடைப்புக் குறிக்குள் குறிக்கப்பட்டுள்ள இரண்டு எழுத்துக்களையும் தவிர A முதல் Z வரையுள்ள எழுத்துக்களையுடைய அதே இலக்க டிக்கட்டுகளும் ஆறுதல் பரிசு பெறும் டிக்கட்டுகளாகும்.

09 A 000759 முதல் 09 Z 000759 வரையுள்ள டிக்கட்டுகள் [I N எழுத்துக்கள் நீங்கலாக]

32 A 000578 முதல் 32 z 000578 வரை [I, P எழுத்துக்கள் இல்லை].

12 A 000329 முதல் 12 z 000329 வரை. [I, C எழுத்துக்கள் தவிர].

01 A 000847 முதல் 01 z 000847 வரை, (I, R எழுத்துக்கள் இல்லை.

41 A 000288 முதல் 41 z 000288 வரை. (I, V எழுத்துக்கள் இல்லை]

32 A 000056 முதல் 32 z 000056 வரை. [I, T எழுத்துக்கள் தவி].

23 A 001486 முதல் 23 Z 001486 வரை. [I, K எழுத்துக்கள் நீங்கலாக].

34 A 000536 முதல் 34 Z 000536 வரை. [I, W எழுத்துக்கள் நீங்கலாக].

13 A 001317 முதல் 13 Z 001347 வரை. [I, Q எழுத்துக்கள் நீங்கலாக.]

30 A 001040 முதல் 30 Z 001040 வரை. [I, N எழுத்துக்கள் நீங்கலாக].

28 A 000405 முதல் 28 Z 000405 வரையுள்ள டிக்கட்டுகள், [I, U எழுத்துக்கள் நீங்கலாக].

19 A 000837 முதல் 19 Z 000837 வரையுள்ள டிக்கட்டுகள். [B, I எழுத்துக்கள் நீங்கலாக].

I என்ற எழுத்து டிக்கட்டுகளில் இல்லை. எனவே அதைச் சேர்த்துக்கொள்ளவேண்டியதில்லை. — இனி

13 A 000711 முதல் 13 z 000711 வரை. [U எழுத்து இல்லை.]

03 A 000840 முதல் 03 Z 000840 வரை. [L எழுத்து இல்லை].

17 A 000951 முதல் 17 z 000951 வரை. [L எழுத்து நீங்கலாக].

02 A 000885 முதல் 02 Z 000885 வரை. [K எழுத்து தவிர],

05 B 000140 முதல் 05 z 000140 வரை.

06 A 001588 முதல் 06 z 001588 வரை. [N எழுத்து நீங்கலாக]

19 A 000756 முதல் 19 z 000756 வரை. [P எழுத்து இல்லை.]

27 A 000982 முதல் 27 z 000982 வரை. [O எழுத்து இல்லை.]

23 A 001192 முதல் 23 z 001192 வரை, [C எழுத்து இல்லை.]

09 A 001226 முதல் 09 z 001226 வரை. H எழுத்து தவிர.]

23 B 001072 முதல் 23 z 001072 வரை.

35 A 001127 முதல் 35 Z 001127 வரை [T எழுத்து இல்லை.]

38 A 001379 முதல் 38 001379 வரை (O எழுத்து தவிர)

37 A 000431 முதல் 37 z 000431 வரை [R எழுத்து இல்லை]

06 A 000065 முதல் 06 z 000065 வரை [H எழுத்து நீங்கலாக]

37 A 000219 முதல் 37 z 000219 வரை (U எழுத்து தவிர)

04 A 001247 முதல் 04 z 001247 வரை [B எழுத்து தவிர]

32 A 000936 முதல் 32 z 000936 வரை (O எழுத்து நீங்கலாக)

30 A 001564 முதல் 30 z 001564 வரை (F எழுத்து தவிர)

37 A 001078 முதல் 37 z 001078 வரை [W எழுத்து தவிர]

30 A 001010 முதல் 30 z 001010 வரை [V எழுத்து நீங்கலாக]

21 A 001726 முதல் 21 z 001726 வரை (Q எழுத்து தவிர)

34 A 001180 முதல் 34 z 001180 வரை [F எழுத்து நீங்கலாக உள்ள டிக்கட்டுகள் ஆறுதல் பரிசு பெறும் டிக்கட்டுகளாகும்.

[இந்த முடிவுகள் யாவும் தேசிய லொத்தர் சபையினால் உத்தியோகரீதியில் உறுதிப்படுத்தப்பட வேண்டும்]

## தாக்கப்பட்டவர் ஆஸ்பத்திரியில்

மாவிட்டபுரம், விசா, அரிவாலையைச் சேர்ந்த சின்னப்பு கணேசன் என்பவர் இன்று காங்கேசன் துறைக்கு சென்று கொண்டிருக்கையில் தாக்கப்பட்டாராம். இவர் காங்கேசன் துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவருடன் கூடச் சென்றதாகக் கூறப்படும் முத்தையா செல்லத்துரை காங்கேசன் துறைபொலிஸில் செய்துள்ள புகாரில் தானும் கணேசனும் சென்று கொண்டிருந்த போது இனந்தெரியாத ஒருவர் மெந்து தொழிற்சாலைக்கு சமீபத்தில் தம்மைத் தாக்கியதாகவும், தான் ஓடிவிட்டதாகவும் தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக பொலிசார் புலன் விசாரணை செய்கின்றனர்.

## விஜயலட்சுமி ராஜினமா

புதுடில்லி, ஜூலை 16 காலஞ்சென்ற பிரதமர் திரு. நேருவின் சகோதரி விஜயலட்சுமி பண்டிட் லோகசபை [இந்திய மக்கள் பிரதிநிதிகள் சபை] அங்கத்தவர் பதவியிலிருந்து ராஜினமா செய்துள்ளார்.

## கதவு திறந்ததும் . . . . .

[1ம் பக்கத் தொடர்ச்சி] துரைச்சாமி குருக்களை நேற்று ஒரு கோஷ்டி சுடத் திச்சென்று, ஆலயப்பிரவேசத்திற்கு ஆதரவாக கையெழுத்து வாங்க முயற்சித்ததாகவும். இதனை தொண்டர் கோஷ்டியொன்று முறியடித்ததாகவும், தொண்டர் சபையை சேர்ந்த ஒருவர் தெரிவித்தார்.

நேற்று நண்பகல் 12-30 மணிக்கு குணரத்தினம் என்பவர் தலைமையில் சுமார் 50 பேர் அடங்கிய ஹரிஜனர் கோஷ்டி யொன்று கோவிலுக்கு வந்து சேர்ந்தது. இக்கோஷ்டி மாலை 6 மணிவரை கோவில் வாசலில் தங்கியிருக்குமென குணரத்தினம் தெரிவித்தார்.

வெளி மண்டபத்திலுள்ள சுவரில் 'பக்தர்கள் இருந்து கொண்டு கும்பிடக்கூடாது; நின்றுகொண்டு கும்பிடுவது தான் சைவ மரபு' என்ற போர்டு தொங்க விடப்பட்டுள்ளது.

அழகான வேலைப்பாடு அமைந்த கைப்பிரம்புடன் வெளிவீதியில் சுற்றிக்கொண்டிருந்த திரு. சி. சுந்தரலிங்கத்திடம் "நிலைமை எப்படி இருக்கிறது?" என நான் கேட்டேன். "நான் இல்லாவிட்டாலும் இங்கு வேலைகளைக் கவனிக்க நூற்றுக்கணக்கான தொண்டர்கள் இருக்கிறார்கள்" என்று கூறி வழக்கம்போலச் சிரித்தார்.

குருக்கள் வீட்டுவாசலில் குருக்கள் வீட்டிற்கு செல்லும் வழி உத்தரவின்றி உட்பிரவேசிக்க கூடாது என்ற போர்டு தொங்க விடப்பட்டுள்ளது. குருக்கள் வீட்டிலும் தான் பக்தர்கள் சென்று கொண்டிருந்தார்கள்.

'நான் உள்ளே செல்ல முயன்றபோது தொண்டர்கள் ஐந்தத்தால் தன் வயிற்றில் சுட்டதாகவும், தன்னுடைய நோக்கம் நிறைவேற எந்தக் கஷ்டத்தையும் ஏற்கத் தயாராக இருப்பதாகவும் பொலிஸில் முறைப்பாடு செய்து விட்டு வெளியில் வந்த ஆறுமுகம் கந்தையா கூறினார்.

## தமிழர் தமது...

[2-ம் பக்கத் தொடர்ச்சி] பிள்ளைகள் அரசாங்க சேவையிலோ, வர்த்தக சேவையிலோ சேரும்போது சிங்களப்பிள்ளைகளுடன் போட்டியிடுவதற்கும் வசதியாயிருக்கும்.

இப்பொழுது ஒரு தமிழ் ஊழியர் எவ்வளவுதான் திறமைசாலியாயும் கடும் உழைப்பாளியாயும் விளங்கியபோதிலும், உத்தியோக மொழி தேர்ச்சி இல்லாவிட்டால் அவன் முன்னேறமுடியாது.

சிங்களம் ஒரு இலகுவான மொழி. தமிழ் மாணவர்கள் அதை வெகுசுலபமாகக் கற்றுக்கொள்ளலாம். விரைவில் தமிழர்களே சிங்களப் பாண்டித்திய முடையவர்களாக விளங்கவும்கூடும். மீண்டும் அவர்கள் அரசாங்க சேவையில் தலைமைப் பதவிகளை வகிக்கக்கூடும்.

எமது குழந்தைகளின் வருங்காலத்தை அரசியல் வாதிகளின் விருப்புவெறுப்புகளுக்கு அடிமைப்படுத்தலாமா?

ஃ ஃ ஃ

பல காலத்திற்குப் பிறகு செனட் சபையில் திரு. எஸ். நடேசன் கியூ சி. சிம்மாசனப் பிரசங்கத்தின் மீது ஓர் அற்புதமான சொற்பொழிவாற்றி விளக்கினார். அவருடைய பிரசங்கங்கள் எப்பொழுதும் மிகவும் தூய்மையானவையாயும்தரமானவையாயும் இருக்கும். ஆனால் அன்று சமஷ்டியோடு சம்பந்தமில்லாத இவர், சமஷ்டிக்காரரைவிட சமஷ்டிக் கொள்கையையே ஆதரித்துப் பேசினார்.

சிறுபான்மையினரின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவர் 3 வழிகளைத் தெரிவித்தார். ஒன்று, சிங்களம் தமிழ் ஆகிய இரு மொழிகளையும் உத்தியோக மொழிகளாக்குவது. ஆனால் இது இந்நாட்டின் பெரும்பான்மை மக்கள் விரும்பாதது மற்றது ஐக்கிய அமெரிக்கா, சோவியத் யூனியன், சுவிட்சலாந்து முதலிய இடங்களில் இருப்பது போன்ற ஒரு சமஷ்டி அரசியல். மூன்றாவது சொந்த மொழி, சொந்த மதம், சொந்த நிர்வாகம் ஆகியவற்றைக் கொண்ட பிரதேச சுயாட்சியென்பது. இப்படிப்பட்ட ராஜ்யங்கள் சீனத்தில்கூட இருப்பதை அவர் உதாரணமாகக் காட்டினார். இந்நாடுகளில் தேசிய அபிவிருத்தியை முன்வைத்தே எப்படியான அரசியலமைப்பு உண்டென்பதை அந்நாட்டு அரசியல் திட்டங்களிலிருந்து எடுத்துக்காட்டினார்.

சமஷ்டி அரசியல் வேண்டுமென்று சமஷ்டிக்கட்சி கேட்பதில் என்ன தவறென்று அவர் செனட்டர்களை வினவினார்.

சமஷ்டிக்கட்சி தன் பெயரை மாற்றவேண்டுமென்றும், சமஷ்டி அரசியல் அமைக்கவேண்டுமென்ற நோக்கத்தைக் கைவிட வேண்டுமென்றும் எதிர்க்கட்சி கேட்பது தவறென்றும் அவர் கண்டித்தார்.

பெரும்பான்மையான சிங்களத் தலைவர்களும், சிறுபான்மைத் தலைவர்களும் ஓர் உச்சி மகாநாடு கூட்டினால்தான் சமரசநிலைமை ஏற்படுமென்று அவர் யோசனை கூறினார்.

வட்டமேசை மகாநாடு என்று அவர் சொல்லாவிட்டாலும் அதை மறைமுகமாகக் கூறிவிட்டார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாண[illegible] இலக்கத்திலுள்ள [illegible] அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஜூலை மாதம் 18-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org